இலவச இதழ்

அந்தி கிறிஸ்துவின் ஆவி

முன்பு ஒரு போதும் இல்லாத அளவிற்கு, தேவனுடைய இராஜ்யத்துக்கும், பிசாசின் இராஜ்யத்துக்கும் இடையே யுத்தம் அதிகரித்துக்கொண்டிருக்கும் ஓர் காலக்கட்டத்தில் நாம் வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம். கிறிஸ்துவின் வருகையை, மற்றும் சாத்தானின் இராஜ்யத்தின் இறுதி அழிவையும் நாம் நெருங்கிக் கொண்டிருப்பதே இதன் காரணம் என்று எண்ணுகிறேன்.

சாத்தானின் இராஜ்யத்தின் பிரதான செயல்பாடுகளில் ஒன்றினை நான் ஆராய விரும்புகிறேன்: தேவனுக்கும், இயேசு கிறிஸ்துவின் சபைக்கும் விரோதமாக சாத்தானின் எதிர்ப்பு. அந்தி கிறிஸ்துவின் ஆவி என்றழைக்கப்படும் ஒன்றினை நான் விவரிக்கப்போகிறேன். இது பிரதானமாக விவரிக்கப்பட்டுள்ள, 1 யோவான் 2:18-23ஐ நாம் முதலாவது பார்க்க வேண்டும்:

> *பிள்ளைகளே, இது கடைசிக்காலமாயிருக்கிறது; அந்திக்கிறிஸ்து வருகிறானென்று நீங்கள் கேள்விப்பட்டபடி இப்பொழுதும் அநேக அந்திக்கிறிஸ்துகள் இருக்கிறார்கள்; அதினாலே இது கடைசிக்காலமென்று அறிகிறோம். அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்து போனார்கள், ஆகிலும் அவர்கள் நம்முடையவர்களாயிருக்கவில்லை; நம்முடையவர்களாயிருந்தார்களானால் நம்முடனே நிலைத்திருப்பார்களே; எல்லாரும் நம்முடையவர்களல்லவென்று வெளியாகும்படிக்கே பிரிந்துபோனார்கள். நீங்கள் பரிசுத்தராலே அபிஷேகம் பெற்றுச் சகலத்தையும் அறிந்திருக்கிறீர்கள். சத்தியத்தை நீங்கள் அறியாததினாலல்ல, நீங்கள் சத்தியத்தை அறிந்திருக்கிறதினாலும், சத்தியத்தினால் ஒரு பொய்யுமுண்டாயிராதென்பதை நீங்கள் அறிந்திருக்கிறதினாலும், உங்களுக்கு எழுதியிருக்கிறேன். இயேசுவைக் கிறிஸ்து அல்ல என்று மறுதலிக்கிறவனேயல்லாமல் வேறேயார் பொய்யன்? பிதாவையும் குமாரனையும் மறுதலிக்கிறவனே அந்திக்கிறிஸ்து. குமாரனை மறுதலிக்கிறவன் பிதாவையுடையவனல்ல, குமாரனை அறிக்கையிடுகிறவன் பிதாவையும் உடையவனாயிருக்கிறான்.*

நாம் இந்த யுகத்தின் முடிவை நெருங்க, இந்த ஆவியின் செயல்பாடு இன்னும் அதிகரிக்க போகிறது.

“அந்தி கிறிஸ்து" அல்லது “ஆன்டி க்ரைஸ்ட்" (antichrist) என்றபதத்தின் உண்மையான அர்த்தத்தை நான் விளக்கட்டும். “கிறிஸ்து" என்கிறவார்த்தை, “கிறிஸ்டாஸ்" என்றகிரேக்க பதத்திலிருந்து வருகிறது. இது மேசியா என்றவார்த்தை எடுக்கப்படும் எபிரேய சொல்லாகிய “மசியாக்" என்பதற்கு சமமானது. ஆகையால் நாம் “அந்தி கிறிஸ்து" என்று கூறும் பொழுது, அதற்கு அர்த்தம் மேசியாவிற்கு விரோதமானவன் என்று அர்த்தமாகும்.

“ஆன்டி" என்பது ஒரு கிரேக்க முன் இடைச்சொல்லாகும். இதற்கு இரண்டு அர்த்தங்கள் உண்டு, இவை இரண்டும் பொருத்தமானவைகளுமே. முதலாவது, அதற்கு “விரோதம்" என்று அர்த்தமாகும். ஆகையால் முதல் செயல்பாடு, மேசியாவுக்கு விரோதமாய் இருப்பது. இரண்டாவதாக, “அதின் ஸ்தானத்தில்" என்றஅர்த்தமும் இதற்கு உண்டு. மெய்யான மேசியாவின் ஸ்தானத்தில் ஒரு

பொய்யான மேசியாவை வைப்பதே இறுதி நோக்கமாகும். ஆகையால் இந்த செயல்திட்டம் இரண்டு கட்டங்களில் செயல்படும். இதை நீங்கள் வகையறுக்க ஆரம்பிக்கும் போது, அந்தி கிறிஸ்துவின் ஆவி, முழு கிறிஸ்தவ சபைக்குள்ளும் மிகவும் சுருசுருப்பாக செயலாற்றிக் கொண்டிருப்பதை நீங்கள் காண்பீர்கள்.

பழமைவாய்ந்த சுவிசேஷ சபைகளை சார்ந்த நன்பர்கள் எனக்கு உண்டு. "எங்கள் சபையில் நீங்கள் புத்தரை குறித்தோ, சாக்ட்டீஸை குறித்தோ, மார்டின் லூத்தர் கிங்கை குறித்தோ பேசலாம், ஒருவரும் எரிச்சலடைய மாட்டார்கள். ஆனால் இயேசுவை குறித்து நீங்கள் பேசினால், எல்லோரும் எரிச்சலடைந்து விடுவார்கள்." என கூறினார்கள். அது தான் அந்தி கிறிஸ்துவின் ஆவி. ஆனால் அதுவே சாத்தானின் இறுதியான நோக்கமல்ல என்பதை மனதில் கொள்ளுங்கள். மெய்யான மேசியாவை தகர்த்து, பொய்யான மேசியாவை அவ்விடத்தில் வைப்பதே அவன் நோக்கம்.

1 யோவான் 4:2-3ல் நாம் இவ்வாறாக வாசிக்கிறோம்:

> *தேவஆவியை நீங்கள் எதினால் அறியலாமென்றால்: மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணுகிறஎந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக்கிறது. மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல; வருமென்று நீங்கள் கேள்விப்பட்ட அந்திக்கிறிஸ்துவினுடைய ஆவி அதுவே, அது இப்பொழுதும் உலகத்தில் இருக்கிறது.*

1 யோவான் 2ல் நாம் வசித்த மற்றபகுதியோடு இதை இணைத்து பார்க்கும் போது, அந்தி கிறிஸ்துவின் மூன்று ரூபங்களை நாம் பார்க்கிறோம். முதலாவதாக அநேக அந்தி (கள்ள) கிறிஸ்துக்கள் உண்டு. மனித சரித்திரத்தில் அநேக கள்ள கிறிஸ்துக்கள் தோன்றி, வெளிப்பட்டுள்ளார்கள். இரண்டாவதாக, அந்தி கிறிஸ்து என்னும் ஒரு நபர் உண்டு. அது தான் இறுதியான வெளிப்பாடு, இன்னும் மனித சரித்திரத்தில் வெளியரங்கமாகாதது. அவனுடைய நிழல் ஏற்கெனவே மேடையின் மேல் விழுந்துவிட்டதென்று நம்புகிறேன் ஆனால் இது வரை அந்த நபரை நாம் இன்னும் கண்டதில்லை. ஆனால் வேதாகமம் மிக தெளிவாக கூறுவது போல, முழு மனுகுலத்தையும் ஒரு குறுகிய காலத்துக்கு ஆளுகை செய்ய போகும் ஓர் இறுதி, மிகவும் பொல்லாத, ஆதிக்கம் நிறைந்த ஓர் தலைவன் எழும்புவான், அவன் தான் அந்தி கிறிஸ்து.

மூன்றாவது ரூபம், அந்தி கிறிஸ்துவின் ஆவி என்பதாகும். இதுவே ஒவ்வொரு அந்தி கிறிஸ்துவுக்குள்ளும் செயலாற்றுகிறஆவியாகும். அந்தி கிறிஸ்துவின் ஆவியை குறித்து, யோவான் நமக்கு சில மிக முக்கிய குறிப்புகளை கொடுத்திருக்கிறார். முதலாவது, அது தேவனுடைய மக்களோடு தொடர்புடையதாகவே ஆரம்பிக்கின்றது. அந்தி கிறிஸ்துவை குறித்து 1 யோவான் 2:19ல் யோவான் இவ்வாறாக எழுதுகிறார்:

> *அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்து போனார்கள், ஆகிலும் அவர்கள் நம்முடையவர்களாயிருக்கவில்லை; நம்முடையவர்களாயிருந்தார்களானால் நம்முடனே நிலைத்திருப்பார்களே; எல்லாரும் நம்முடையவர்களல்லவென்று வெளியாகும்படிக்கே பிரிந்துபோனார்கள்*

ஆகையால் ஏதோ ஓர் விதத்தில், எப்போதுமே அந்தி கிறிஸ்து என்பவன் தேவனுடைய மக்களோடு தொடர்புடையவனாகவே துவங்குகிறான். ஆனால் அவன் அவ்விடத்திற்குறியவன் அல்ல என்பதினால், ஏற்றகாலத்தில் அது வெளியரங்கமாகிறது. அது தான் அவன் முதல் அடையாளம்.

இரண்டாவதாக, நாம் 1 யோவான் 2:22ல் காண்பது போல, அது இயேசு மேசியா அல்ல என்று நிராகரிக்கிறது:

> *இயேசுவைக் கிறிஸ்து அல்ல என்று மறுதலிக்கிறவனேயல்லாமல் வேறேயார் பொய்யன்?*

தொடர்ந்து மூன்றாவது அடையாளத்தையும் யோவான் முன்வைக்கிறார்:

> *பிதாவையும் குமாரனையும் மறுதலிக்கிறவனே அந்திக்கிறிஸ்து.*

இது மிக முக்கியமானது. தேவன் இல்லை என்று அந்தி கிறிஸ்து நிராகரிப்பதில்லை. உண்மையை சொல்ல

போனால், தானே தேவனுடைய பிரதிநிதி என்று கூறுகிறான். ஆனால், தெய்வத்துவத்திற்குள் பிதாவுக்கும் குமாரனுக்கும் இருக்கும் உறவை அவன் மறுதலிக்கிறான்.

நான்காவது அடையாளம் 1 யோவான் 4ல் கொடுக்கப்பட்டுள்ளது, மேசியா வந்து விட்டார் என்பதை நிராகரிக்கிறது - வரப்போகும் மேசியாவை நம்பும் ஆனால் மேசியா வந்து விட்டார் என்பதை நிராகரிக்கும்.

ஒரு குறிப்பிட்ட உதாரணம்

அந்தி கிறிஸ்துவின் ஒரு சரித்திரப்பூர்வ, ஆனால் விவாதத்திற்குரிய உதாரணத்தை நான் காண்பிக்க விரும்புகிறேன். யாரையும் புண்படுத்த வேண்டும் என்பதோ, மற்றமதங்களை தாக்குதோ என்னுடைய நோக்கமல்ல. சத்தியத்தையே நான் முன்வைக்க விரும்புகிறேன்.

மதமாகிய இஸ்லாம், அந்தி கிறிஸ்துவின் ஆவியின் பிரதான வெளிப்பாடாகும். செப்டம்பர் 11, 2001 அன்று அமெரிக்காவில் நிகழ்ந்த சம்பவங்களின் வெளிச்சத்தில், கிறிஸ்தவர்கள் இஸ்லாமை குறித்து நன்று அறிந்திருக்க வேண்டும் என்பது மிக முக்கியம் என்று கருதுகிறேன்.

அரேபிய வளைகுடாவில் 7ம் நூற்றாண்டில், முகமது எழும்பி, தன்னை ஓர் தீர்க்கதரிசி என்று கூறி, ஒரு பிரதான தூதனிடத்திலிருந்து, இஸ்லாமாக மாறிய மதத்தின் வெளிப்பாடுகளை பெற்றதாக கூறினான். பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளின் உண்மையான நிறைவேறுதலே இஸ்லாம் என்றும் கூறினான். கிறிஸ்தவர்களும், சுவிசேஷங்களும், உண்மையான சத்தியத்தை மாற்றி விட்டதாகவும், தான் அதை திருத்தியமைப்பதாகவும் கூறினான். இது தான் முகமதின் அடிப்படை வாதம். விக்கிரக ஆராதனையையும், கிறிஸ்தவத்தின் கூற்றுகளையும் நிராகரித்த படியால், யூதர்கள் பெரும் அளவில் தன்னை பின் பற்றுவார்கள் என நம்பினான். ஆனால் அவர்கள் அவனை பின்பற்றவில்லை என்றவுடன், அவன் அவர்களுக்கு விரோதமாக திரும்பி, அவர்களை துன்புருத்துகிறவனாக மாறினான்.

மேற்கத்திய நாடுகளில் அநேக கிறிஸ்தவர்கள், இஸ்லாமை தவறாக புரிந்து கொண்டு, அதை குறைமதிப்பீடு செய்திருப்பது, வருந்தக்கூடிய காரியமாகும். பல நூற்றாண்டுகளாக, இஸ்லாமிய நாடுகளில் கிறிஸ்தவர்களுக்கும் யூதர்களுக்கும் "டிம்மி" என்றபெயர் கொடுக்கப்பட்டுள்ளது. இதற்கு அர்த்தம் இரண்டாம் தரத்து மக்கள் என்பதாகும். ஹிட்லரின் படுகொலையை போன்றமா பெரிய எந்த தீங்கையும் செய்யாதே போனாலும், 13 நூற்றாண்டுகளாக இஸ்லாம், கிறிஸ்தவத்தையும், யூத மார்க்கத்தையும் அடக்கி, அவமதித்து வந்துள்ளது.

இஸ்லாம் அந்தி கிறிஸ்துவின் ஆவியின் பெரும்பாலான அடையாளங்களையும் கொண்டது. அது பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளை கொண்டு துவங்கியது. தேவனுடைய வெளிப்பாடின் செயல்பாடாக இருப்பதாக கூறியது. ஆனால் இயேசுவின் பரிகார மரணம் போன்றகிறிஸ்தவத்தின் சில அடிப்படை சத்தியங்களை அது நிராகரிக்கிறது. இயேசு மரிக்கவில்லை, அவர் மரிக்கும் முன் ஒரு தூதன் தோன்றி அவரை கடத்தி சென்று விட்டான் என்று முகமது கற்பித்தான். மரணம் இல்லாததால் பரிகாரமுமில்லை, பரிகாரமில்லாததால் மன்னிப்பும் இல்லை என்றான். எந்த இஸ்லாமியருக்கும் தன் பாவங்கள் மன்னிக்கப்பட்டுள்ளன என்றஉறுதி, எந்த நேரத்திலும் கிடையாது.

இரண்டாவதாக, இயேசு தேவனுடைய குமாரன் என்பதை இஸ்லாம் நிராகரிக்கிறது. இயேசு ஒரு தீர்க்கதரிசி என்று நீங்கள் இஸ்லாமியரோடு பேசினால், அவர்கள் கவனமாய் கேட்பார்கள். குரான் புத்தகம் இயேசுவை ஒரு தீர்க்கதரிசியாக ஏற்கிறது - அவர் ஒரு இரட்சகர், மேசியா என்பதை கூட ஒப்புக்கொள்வார்கள். ஆனால் அவர் தேவனுடைய குமாரன் என்று நீங்கள் கூறினால், அவர்களிடமிருந்து மிக கடுமையான, கசப்பான எதிர்ப்பு கிளம்பும். எருசலேமில், சாலமோனின் தேவாலயம் ஒரு காலத்தில் நின்றஸ்தலத்தில் கட்டப்பட்டுள்ள "டோம் ஆப் தி ராக்" என்று அழைக்கப்படும் பிரபலமான மசூதியின் வெளிப்புறங்களில், இரண்டு முறை "தேவனுக்கு ஒரு குமாரன் தேவையில்லை" என்று எழுதப்பட்டிருக்கிறது.

இஸ்லாமின் நம்பிக்கைகள் மற்றும் போதகங்களை குறித்து இன்னும் தெளிவாக நீங்கள் அறிய விரும்பினால், என்னுடைய நண்பர் ஜிம் கிராஃப்ட்டின் புத்தகம் "தி முஸ்லிம் மாஸ்கரேட்"ஐ வாசியுங்கள். ஜிம் இந்த காரியத்தை ஆளமாக ஆராய்ச்சி செய்து, தன்னுடைய கருத்துக்களை, குரானிலிருந்து பல எடுத்துக்காட்டுகள்

மூலமாக உறுதிப்படுத்துகிறார்.

அந்த நபர்

அந்தி கிறிஸ்துவின் ஆவியின் இறுதி வெளிப்பாடை நான் ஆராய விரும்புகிறேன்: அந்தி கிறிஸ்து என்னும் நபர். இது எதிர்காலத்திற்குரிய ஒன்று என்று நம்புகிறேன். சாத்தான் திட்டமிட்டுக்கொண்டிருப்பது என்ன என்பதை நீங்கள் அறியாமலிருக்க கூடாது என்பதற்காக, வேதாகமத்தின் சில முக்கியமான பகுதிகளை நான் ஆராய விரும்புகிறேன்.

2 தெசலோனிக்கேயர் 2ல் பவுல், அந்தி கிறிஸ்துவின் தோற்றம், வெளிப்பாடு மற்றும் செயல்பாட்டை குறித்து எழுதுகிறார். கர்த்தருடைய வருகைக்காக ஆயத்தப்படுவதை குறித்தும் அவர் எழுதுகிறார். இவை இரண்டும் மிக நெருக்கமாக தொடர்புடையவை. ஏனெனில், கர்த்தருடைய வருகைக்கு முன்பதாக நிகழும் கடைசி சாத்தானின் செயல், அந்தி கிறிஸ்துவின் வெளிப்பாடாகும். அந்தி கிறிஸ்துவை தன்னுடைய வருகையின் பிரகாசத்தினால் கர்த்தர் அழித்து போடுவார் என்று எழுதியிருக்கிறது. 2 தெசலோனிக்கெயர் 2:1-2ல் நாம் வாசிக்கிறோம்:

> *அன்றியும், சகோதரரே, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்தவின் வருகையையும், நாம் அவரிடத்திலே சேர்க்கப்படுவதையுங்குறித்து, நாங்கள் உங்களை வேண்டிக்கொள்ளுகிறது என்னவென்றால், ஒரு ஆவியினாலாவது, வார்த்தையினாலாவது, எங்களிடத்திலிருந்து வந்ததாய்த் தோன்றுகிறஒரு நிருபத்தினாலாவது, கிறிஸ்துவினுடைய நாள் சமீபமாயிருக்கிறதாகச் சொல்லப்பட்டால், உடனே சஞ்சலப்படாமலும் கலங்காமலும் இருங்கள்.*

வருகை என்றவார்த்தை கிரேக்கத்தில் "பரௌசியா" (parousia) என்பதாகும். இது கிறிஸ்து இயேசுவின் வருகை பொதுவாக பயன்படுத்தப்படுகிறது.

பவுல், "ஒரு ஆவியினாலாவது, வார்த்தையினாலாவது, எங்களிடமிருந்து வந்ததாய் தோன்றுகிறஒரு நிருப்பத்தினாலாவது....சஞ்சலப்படாமலும் கலங்காமலும் இருங்கள்" என்று எழுதுகிறார். ஏனென்றால், இயேசு எப்போது வருவார் என்று முன்னறிவிக்கிறகுறிப்புகளை நம்ப அநேக கிறிஸ்தவர்கள் ஆயத்தமாயிருப்பார்கள் என்பதை பவுல் அறிந்திருந்தார். என் ஊழிய வாழ்கையில், இப்படிப்பட்ட அநேக தீர்க்கதரிசனம் போன்றகாரியங்களை அநேக கிறிஸ்தவர்கள் நம்புவதை கண்டு அவைகளை பற்றிக்கொண்ட கிறிஸ்தவர்களை குறித்து வியப்படைகிறேன்.

2 தெசலோனிக்கெயர் 2:3ஐ நாம் பார்ப்போம்:

> *எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம் போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகனாகிய பாவமனுஷன் வெளிப்பட்டாலொழிய, அந்த நாள் வராது.*

விசுவாச துரோகம் என்றவார்த்தைக்கு கிரேக்கத்தில் ''அப்போஸ்டேஷியா'' என்றபதம் பயன்படுத்தப்பட்டுள்ளது, இதற்கு அர்த்தம், ''வெளிப்படுத்தப்பட்டுள்ள சத்தியத்தை வேண்டுமென்றேதள்ளிவிடுவது" என்பதாகும்.

இந்த வசனம் அந்தி கிறிஸ்துவுக்கு அளிக்கப்படும் இரண்டு பெயர்களை நமக்கு வெளிப்படுத்துகிறது. முதலாவது, அவன் பாவ மனுஷன் அல்லது சட்ட விரோதமான மனிதன் என்று அழைக்கப்படுகிறான். தேவனுக்கும், அவருடைய சட்டங்களுக்கும் விரோதமான மனிதனுடைய கலகத்தின் மிக உயர்ந்த தற்சொரூபமாக இவன் காணப்படுகிறான். அவன் கேட்டின் மகன் என்றும் அழைக்கப்படுகிறான். இழப்பு நிறைந்த நித்தியத்தை நோக்கி ஓடிக்கொண்டிருப்பவன். புதிய ஏற்பாட்டில், கேட்டின் மகன் என்று அழைக்கப்பட்ட இன்னும் ஒரே நபர் யூதாஸ் ஸ்காரியோத்தாவான். அவர் ஒரு கள்ள அப்போஸ்தலன்.

ஆகையால் ஒரே நபருக்குரிய மூன்று பெயர்களை காண்கிறோம்: அந்தி கிறிஸ்து, பாவ மனிதன், கேட்டின் மனிதகன். வெளிப்படுத்தலின் புத்தகம் 13:1ல் இன்னும் ஒரு முக்கியமான பெயர் அவனுக்கு உண்டு. இந்த

வெளிப்பாட்டில், யோவான் கண்ட தரிசனத்தின் ஒரு பகுதி இது.

> *பின்பு நான் கடற்கரை மணலின்மேல் நின்றேன். அப்பொழுது சமுத்திரத்திலிருந்து ஒரு மிருகம் எழும்பிவரக் கண்டேன்; அதற்கு ஏழு தலைகளும் பத்துக் கொம்புகளும் இருந்தன; அதின் கொம்புகளின்மேல் பத்து முடிகளும், அதின் தலைகளின்மேல் தூஷணமான நாமமும் இருந்தன. நான் கண்ட மிருகம் சிறுத்தையைப்போலிருந்தது; அதின் கால்கள் கரடியின் கால்களைப்போலவும், அதின் வாய் சிங்கத்தின் வாயைப்போலவும் இருந்தன; வலுசர்ப்பமானது தன் பலத்தையும் தன் சிங்காசனத்தையும் மிகுந்த அதிகாரத்தையும் அதற்குக் கொடுத்தது. அதின் தலைகளிலொன்று சாவுக்கேதுவாய்க் காயப்பட்டிருக்கக் கண்டேன்; ஆனாலும் சாவுக்கேதவான அந்தக் காயம் சொஸ்தமாக்கப்பட்டது. பூமியிலுள்ள யாவரும் ஆச்சரியத்தோடே அந்த மிருருகத்தைப் பின்பற்றி, அந்த மிருகத்திற்கு அப்படிப்பட்ட அதிகாரங்கொடுத்த வலுசர்ப்பத்தை வணங்கினார்கள். அல்லாமலும்: மிருகத்திற்கு ஒப்பானவன் யார்? அதினோடே யுத்தம் பண்ணத்தக்கவன் யார்? என்று சொல்லி, மிருத்தையும் வணங்கினார்கள்.ஈலிருந்தது; அதின் கால்கள் கரடியின் கால்களைப்போலவும், அதின் வாய் சிங்கத்தின் வாயைப்போலவும்*

இங்கு நான்காவது தலைப்பை காண்கிறோம்: மிருகம். சாத்தான் (வலுசர்ப்பம்) தன் அதிகாரத்தை எல்லாம் எழும்பப்போகிறஇந்த நபருக்கு கொடுப்பான். சாத்தான் இந்த நபருக்கு ஏன் தன்னுடைய அதிகாரத்தை கொடுப்பான் ? ஏனென்றால், இதின் நிமித்தம், அந்த நபர் முழு மனுகுலத்தின் மீதும் ஆதிக்கம் செலுத்தி, சாத்தான் விரும்பும் ஒரே காரியத்தை செய்யும் படி அவர்களை வற்புறுத்துவான்: அவனை வணங்க. இது தான் அவனுடைய இலக்கு. பல நூற்றாண்டுகளாக இதற்கு ஏதுவாக அவன் திட்டமிட்டு, இப்போது தன் இலக்கை அடைய மிகவும் நெருங்கி வந்து விட்டான்.

அட்ன் தலைகளில் ஒன்று, “மரணத்திற்கு ஏதுவான காயம்" கொண்டிருந்ததையும் அந்த காயம் குணமடைந்ததையும் கவனியுங்கள். இங்கு ஒரு விதமான மாயையான உயிர்தெழுதல் நிகழ்கின்றது. இந்த நபர் கொல்லப்படுவாரா என்பது எனக்கு தெரியாது ஆனால் அவன் மரித்த நிலையிலிருந்து உயிர் பெறுவான்.

வெளிப்படுத்தல் 5:5ல், யோவான் தேவனுடைய கர்த்திலுள்ள ஒரு சுருளின் தரிசனத்தை கண்டு, அதை திறப்பதற்கு பாத்திரமான ஒருவரையும் காணாமல் அழுதுக்கொண்டிருந்தார்.

> *அப்பொழுது மூப்பர்களில் ஒருவன் என்னை நோக்கி: நீ அழவேண்டாம்; இதோ, யூதா கோத்திரத்துச் சிங்கமும் தாவீதின் வேருமானவர், புஸ்தகத்தைத் திறக்கவும் அதின் ஏழு முத்திரைகளையும் உடைக்கவும் ஜெயங்கொண்டிருக்கிறார் என்றான்.*

யோவான் ஒரு சிங்கத்தை தேடினார், ஆனால் அந்த சிங்கம் ஒரு ஆட்டுக்குட்டியாக இருந்தது. இது வேண்டுமென்றேகூறப்பட்டுள்ள ஒரு மாறுபாடு. தேவனால் ஏற்படுத்தப்பட்ட அதிபதி, மிருகத்தின் தன்மைய்டையவர் அல்ல. அவருக்கு ஆட்டுக்குட்டியின் தன்மையே உள்ளது. தன் ஜீவனை அவர் தந்ததினால், அவர் எல்லாருக்கும் மேலாக உயர்த்தப்பட்டுள்ளார். அவர் தம்மை கைது செய்து, துன்புருத்தியவர்களை எந்திர்க்காததால், சாந்தம் மற்றும் தாழ்மையின் வழியில் சென்றார். இந்நாட்களில் சபையும் இப்படிப்பட்ட தன்மையை வெளிப்படுத்த வேண்டியதாக இருக்கும் என நம்புகிறேன். இது எளிதான ஒரு காரியமும் அல்ல.

மக்கள் மிருகத்தை வணங்கினார்கள் என்று நாம் கண்டோம். மிருகத்தோடு யுத்தம் செய்வது பயனற்றது என்று நம்பினார்களென்றும் கண்டோம். “உலகமனைத்தும்" மிருகத்தை எதிர்ப்பது பயனற்றது

Derek Prince
MINISTRIES - INDIA

Contact Us:

www.derekprince.in
admin@derekprince.in
Ph: +91 98430 55414
+91 95855 38201
1C, EVR Road
Puthur
Trichy - 620 017.
Tamil Nadu, India.

என்றநிலைக்கு எப்படி கொண்டு வரப்படும் என்று எனக்கு தெரியாது. ஆனால் இக்காலத்தின் தொழில் நுட்பம் மற்றும் ஆயுதங்களை காணும் போது, இச்சம்பவத்தில் சொல்லப்பட்டுள்ள சூழ்நிலை மிக சமீபம் என்று நம்புவது எளிதாக இருக்கிறது.

வெளிப்படுத்தல் 13:6-7ல் அந்தி கிறிஸ்து எடுக்கும் நடவடிக்கையை காண்கிறோம்:

அது தேவனைத் தூஷிக்கும்படி தன்வாயைத் திறந்து, அவருடைய நாமத்தையும், அவருடைய வாசஸ்தலத்தையும், பரலோகத்தில் வாசமாயிருக்கிறவர்களையும் தூஷித்தது. மேலும், பரிசுத்தவான்களோடே யுத்தம்பண்ணி அவர்களை ஜெயிக்கும் படிக்கு அசுற்கு அதிகாரங்கொடுக்கப்பட்டதுமல்லாமல், ஒவ்வொரு கோத்திரத்தின்மேலும் பாஷைக்காரர்மேலும் ஜாதிகள்மேலும் அதற்கு அதிகாரங்கொடுக்கப்பட்டது.

தேட்னுக்கு வெளியரங்கமாக சவால் விடுகிறவன் இவனே. அவன் ஒரு இரகசிய சத்துரு அல்ல. அவன் சர்வ வல்லமையுடைய தேவனின் முகத்திற்கு முன்பாக தன் கையை உய்ர்த்துகிறவனாவான். பரிசுத்தவான்களோடு யுத்தம் செய்யவும், அவர்களை மேற்கொள்ளவும் அவனுக்கு அனுமதி தந்தது யார் என்று நினைக்கிறீர்கள் ? தேவன் தான் - இது நம்மை சிந்திக்கவைக்கும் ஒரு காரியம். கிறிஸ்தவம் ஒரு எளிதான வெற்றியல்ல என்பதை மறந்து விட வேண்டாம்.

8ம் வசனத்தை பார்ப்போம்:

உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியினுடைய ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்படிராத பூமியின் குடிகள்யாரும் அதை வணங்குவார்கள்.

எவ்வளவு அதிர்ச்சியூட்டும் ஓர் வாக்கியம் இது ! தேவன் தமக்கென்று தெரிந்துக் கொண்டவர்களை தவிர, முழு மனுகுலமே அவனை வணங்கும். 2 தெசலோனிக்கெயர் 2:3ஐ பார்த்து முடிப்போம்:

எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகனாகிய பாவமனுஷன் வெளிப்பட்டாலொழிய, அந்த நாள் வராது.

இந்த விசுவாச துரோகம் இன்று உலகத்தில் நடைப்பெற்றுக் கொண்டிருக்கிறதென்று நான் நம்புகிறேன். பல நூற்றாண்டுகளாக மோசமான சபை தலைவர்கள் இருந்திருக்கிறார்கள் ஆனால் அவர்கள் கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படை சத்தியங்களை மறுத்ததில்லை. சொல்லப்போனால் தங்கள் செல்வாக்கை தக்க வைத்து கொள்ள, அந்த சத்தியங்களை தான் பயன்படுத்தியுள்ளார்கள். ஆனால் இருபதாம் நூற்றாண்டில், கிறிஸ்தவத்தின் அடிப்படை சத்தியங்களையே சபை தலைவர்கள் மறுப்பதை கண்டுள்ளோம்: இயேசுவின் தெய்வத்துவம், அவருடைய கன்னி பிறப்பு, அவருடைய பரிகார மரணம், அவருடைய சரீர உயிர்த்தெழுதல் மற்றும் அவருடைய வருகை. இது முன் எந்த நூற்றாண்டிலும் இருந்ததில்லை. ஏற்கெனவே விசுவாச துரோகத்தை நாம் சந்தித்து வருகிறோம் என நம்புகிறேன். பிழையிலிருந்து நம்மை காக்கும் கோட்டையே சபை தான் என்பதை மறந்து விடாதீர்கள். ஆகையால் தன்னுடைய பிழையை கொண்டு சாத்தான் வெற்றி பெறும் முன் அவன் சபையை ஊடுருவி வரவேண்டியது அவசியம்.

இன்னும் தேவையா ?

ஆம், இந்த இலவச இதலில் எனக்கு இன்னும் _____ பிரதிகள் தேவை.

தயவு செய்து அடுத்த முறை எனக்கு கூடுதல் பிரதிகள் அனுப்பவும்

தயவுசெய்து முதல் முறையாக பெறுகிறேன், இனி தொடர்ந்து எனக்கு அனுப்பவும்.

பதிவு செய்க

தயவுசெய்து டெரிக் பிரின்ஸ்- இந்தியா ஊழியஙக்ளைப் பற்றிய ஊழியத் தகவல்களையும், புதிய புத்தகம் / சி.டி விவரங்களையும் எனக்கு அனுப்பி வைக்கவும்.

ஈமெயில் மூலமாக அனுப்பவும்.

கடிதம் மூலமாக அனுப்பவும்.

See over for address details

DEREK PRINCE MINISTRIES - INDIA

www.derekprince.in